Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 01 (17 - 08 - 1992) திங்கட்கிழமை ஓசை 181

## எயிட்ஸ் நோய்க்கு மருந்து; கண்டுபிடிப்பில் வெற்றி

[கொழும்பு]

எயிட்ஸ் நோய்க்கான தடுப்பு மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் ஆராய்ச்சியாளர்கள் வெற்றி கண்டிருப்பதாக தெரியவருகிறது. பரீட்சார்த்தமாக நாய்களின் மேல் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் வெற்றி அளித்துள்ளது. எயிட்ஸ் நோய்க் காரணியான எச் ஐ வி. வைரசுகளை அழிக்கும் உயிரினங்கள் உருவாக்குவதில் இந்த ஆய்வாளர்கள் வெற்றி கண்டிருப்பதாக அமெரிக்க தேசிய விஞ்ஞான அக்கடமியின் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். குடாநாடு மீதான படையெடுப்பு

# ராணுவ வெற்றியில் அரசு தீவிர அக்கறை

# முழு ஒத்துழைப்பு தருவதாக உறுதிமொழி

## பலாலி தளத்தில் அமைச்சர் ரணில்

(கொழும்பு)

வடபகுதியில் பெரும் தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் வெற்றிகொள்வதில் சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை கொண்டுள்ளது. இதன் பிரகாரம் வடபிராந்தியத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதிகளுககு அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பலாலி இராணுவ தளத்துக்கு வந்த சிறிலங்கா அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அங்கு படையினர் மத்தியில் உரையாற்றும் போது இந்த உறுதிமொழியை அளித்தார்.

விடுதலைப்புலிகளைத் திட்டமிட்ட ரீதியில் ஒழித்துக்கட்ட புதிய தளபதிகளான மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா, பிரிகேடியர் றோகான் தலுவத்த ஆகியோருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், வடக்கு, கிழக்குப் போரில் வெற்றிவாகை சூடவேண்டும். இதுவே ஊர்காவற்றுறையில் மரணித்த இராணுவத்தினருக்கு செலுத்தும் கௌரவம். லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணா ஆகியோரின் அடிச்சுவட்டைப்பின்பற்றி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவும் புதிய தளபதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமெனத் தெரிவித்தார். அத்துடன் டென்சில் கொப்பேகடுவ விஜய விமலரட்ணா ஆகியோரின் மரணத்திற்கு அவர் அனுதாபமும் தெரிவித்துக்கொண்டார்.

## புதிய தளபதிகள் பலாலி விஜயம் கள நிலைபரம் பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கென புதிதாக ...

... தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

... இவர்கள் வரவேற்றனர்.

அத்துடன் கட்டுவன், வசாவிளான், மாவிட்டபுரம், ...

வடக்கு - கிழக்கு நிலைபரம்

## ஐரோப்பிய பாராளுமன்றகுழு அநுராவுடன் ஆராய்வு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு நிலைபரம் குறித்து ஐரோப்பிய பாராளுமன்ற குழு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவுடன் விரிவாக ஆராய்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இக்குழு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து அனுரா பண்டாரநாயக்காவை சந்தித்து இது குறித்துப் பேசியது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டதை வரவேற்றதாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலவந்தமாக அகதிகள் அனுப்பப்பட மாட்டார்கள்

சுவிட்சிலாந்து தூதுவர்

(கொழும்பு)

சுவிட்சிலாந்தில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்று கொழும்பிலுள்ள சுவிட்சிலாந்து தூதுவரக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## வலி வடக்கு மக்கள் நட்ட ஈடு கோரிக்கை

(சுன்னாகம்)

வலி வடக்கில் சிறிலங்கா ...

... யாலயத்தில் திரு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற ...

## ஹெலியிலிருந்து கிரனைட் வீச்சு

(பண்டத்தரிப்பு)

சில்லாலையில் ஹெலியிலிருந்து சிறிலங்கா படையினர் வீசிய கிரனைட் வீழ்ந்து வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதானா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குறிபார்த்துச் சுட்டதில் வீடுபார்க்கச் சென்றவர் பலி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் பெண்மணி ஒருவர் பலியானார்.

நேற்றுக் காலை 10. 30மணியளவில் தெல்லிப்பழைப் பகுதியில் வீடு பார்க்கச் சென்றபோதே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதில் அன்னலிங்கம் புஸ்பராணி என்பவரே கழுத்தில் துட்பாக்கிச்சூடு பட்டதில் பலியானவராவார். (ச)

## புளொட் சூட்டிற்கு பொதுமகன் ஒருவர் காயம்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரும் புளொட் குழுவினரும் இணைந்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத் ...

... தீ வைக்கப்பட்டது. இது முற்றாக எரிந்து சாம்பரானது. (தி)

(சுன்னாகம்)

வலிவடக்கில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் அழிந்து போன பயிர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என வலிவடக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்று மாலை இணுவில் அமெரிக்கமிஷன் மகாவித்தியாலயத்தில் திரு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் வலிவடக்கு மக்களுக்கான நிவாரண உதவிகள் சீராக வழங்கப்படல் வேண்டும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது செயற்பாடுகளை புனரமைக்க வேண்டும், கொல்லன்கலட்டி, பன்னாலைப் பகுதிகளில் இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

வட பகுதிக்கென புதிதாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, யாழ். பிராந்திய புதிய தளபதி பிரிகேடியர் றோகான் தளுவத்த ஆகியோர் பலாலி இராணுவத் தளத்திற்கு விஜயம் செய்து தள நிலைமைபற்றி ஆராய்ந்த தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பலாலிக்கு விஜயம் செய்த சிறிலங்கா அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவையும் கூட்டுப்படைத் தலைமைத்தளபதி ஹமில்டன் வனசிங்காவையும் பலாலி விமானத்தளத்தில் வைத்து

அத்துடன் கட்டுவன், வசாவிளான், மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை பகுதிகளுக்கு அமைச்சருடன்சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் இவர்கள் வவுனியா பகுதிக்கும் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குழுவினரும் இணைந்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

கணபதி கனகரட்ணம் 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு என்பவரே காயமடைந்தார். இத்தாக்குதலின் பின்னர் புளொட் குழுவினர் தென் பகுதி நோக்கிச் செல்லக் காத்திருந்த தமிழர் ஒருவரின் லொறிக்கு தீ வைத்து கொளுத்தினர்.

மயிரிழையில் தப்பித்து ஒடி வந்த லொறிச் சாரதியின் ஆடைகளைப்போட்டு லொறிக்குத் தீ வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

22 சிறி 6535 என்னும் இலக்கத்தைக் கொண்ட லொறியே

# காயமடைந்த 2புளொட் பலி

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்திருந்த இரகுவரன், காந்தன் ஆகிய இரண்டு புளொட் உறுப்பினர்களும் இறந்து விட்டதாகத் தெரியவருகிறது.

அனுராதபுரம் வைத்தியசாலையிலேயே இவர்கள் இருவரும் மரணமானார்கள்.

இதே தாக்குதலில் ஒரு புளொட் உறுப்பினர் ஏற்கனவே பலியானது தெரிந்ததே.

## 35 தமிழர் படுகொலை

# படைக்கு தொடர்பிருந்தால் தண்டிக்கப்படுவராம்

மலியதனையில் 35 தமிழ் மக்கள்படுகொலை செய்யட்பட்ட சம்பவத்தில் இராணுவத்தினர் தொடர்புபட்டிருப்பின் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

மேற்கண்டவாறு பத்திரிகையாளர் மாநாடொன்றில் கேணல் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக பொலிசார் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விடயத்தில் இராணுவத்தினர் சம்பந்தப்படவில்லையெனவே தெரிவிக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

# மாரியம்மன் பக்தர்கள் மீது சிங்களவர் தாக்குதல்

திகண முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் சிங்களவர்களினால் தாக்கப்பட்டனர் என தெரியவருகின்றது.

இச் சம்பவம் பற்றி இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி பி. தேவராஜ்ஜி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சவாலை எதிர் கொள்ள புதிய தளபதி தயாராம்

(கொழும்பு)

சட்டம், ஒழுங்கை சீர்குலைக்க முயன்றால் படைத்தளபதி என்ற வகையில் எனது கடமையைச் செய்து சவாலை எதிர் நோக்குவேன் என்று கிழக்குப்பிராந்திய இராணுவப் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கிழக்கு இலங்கையில் அனைத்து இன மக்களும் சமாதானமாக வாழவேண்டும் என்பதுவே தனது விருப்பம் எனவும் கூறினார்.

இராணுவத்தில் முப்பது வருடம் சேவையாற்றியுள்ள இவர் தென்னிலங்கையில் ஜே வி. பி. யினரை ஒழித்துக் கட்டுவதில் முக்கியபணியாற்றியவர் ஆவார்.

# இராணுவத்தின் மனோதிடம் பாதிப்படையவில்லையாம்

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டதால் சிறிலங்கா இராணுவத்தின் மனோதிடம் பாதிப்படையவில்லை. மாறாக விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்ற ஓர் உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று இராணுவ தரப்புப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கா பி பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

மேலும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், காலஞ்சென்ற லெப். ஜெனரல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கறுப்புப்பூனைகளுக்கு அஞ்சி லலித் வெளிநாடு சென்றார்

(கொழும்பு)

நாட்டில் வெகு விரைவில் தேர்தல் இடம் பெறவுள்ளதால் அரசியல் எதிரிகள் கரும்பூனைகளால் தீர்த்துக்கட்டப்படலாம் என்ற அச்சத்தில் முன்னால் அமைச்சர் அத்துலத் முதலி ஐரோப்பா பயணமானார் என்று பி.பி.ஸி. தெரிவிக்கிறது. இதேவேளை, ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவும் அரச முறைப் பயணத்தை மேற்கொணடு வெளிநாடு போகவுள்ளார். ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கும் சமயத்தில் அரசியல் கொலைகள் நடைபெறுவது சகஜம் என்றும் அதே தரப்புச் செய்தி தெரிவிக்கிறது.

அத்துலத்முதலி அவரது மனைவி மற்றும் மகளுடன் கடந்த வியாழனன்று விடுமுறையில் ஐரேப்பாவிற்குப் பயணமானது தெரிந்ததே

# ரோந்து நடவடிக்கைகளை குறைக்க முடிவாம்

கிழக்கில் விடுதலைப்புலிகள் நடத்திவரும் தொடர்ச்சியான தாக்குதல்களையடுத்து ரோந்து நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ள இராணுவம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கிறது.

புதிய தாக்குதல்களை நடத்துவதைவிட தமது நிலைகளைப் பலப் படுத்துவது எனவும் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவச் சிப்பாய்களின் பற்றாககுறையை கருத்திற் கொண்டே இராணுவ உயர் மட்ட சந்திப்பில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக வெரிதாஸ் வானொலி தெரிவித்தது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு நிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்களில் புனர் வாழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இதனால் அப்பகுதியில் பாதிக்கப்பட்ட பல தமிழ் மக்கள் இன்னல்களுக்குள்ளாகியுள்ளனர் எனக் காந்திசேவா சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கிலங்கைப் புனர்வாழ்வுத் தலைவர் திருமலை, மட்டக்களப்பு ஆயர் வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்திசேவா சங்கம் இக்கருத்தை வெளியிட்டது உறைவிடம் மற்றும் தொழில்களை இழந்துள்ள மக்களுக்கு காலம் தாழ்த்தாது புனர்வாழ்வு அளிப்பது முக்கியமானதாகும். எனவே இம்மாவட்ட மக்கள் அனைவருக்கும் உணவு அளிக்கப்படல் வேண்டும் என மேற்படி சங்கம் கோரியுள்ளது.

# இரவில் திருமலை மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில், மாலை 6.00 மணிக்குப் பின்னர் மீனவர்கள் கடலுக்குப் புறப்பட்டுச் செல்லக் கூடாது என சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

பகல் நேரங்களில் கடல் தொழிலுக்குப் புறப்பட்டுச் செல்லும் மீனவர்கள் இரவு நேரத்தில் கரை திரும்பக் கூடாது என்றும்,

ஆழ்கடலில் இரவுநேரத்தில் மீன் பிடிப்போர் மறு நாள் காலை 3 00 மணிக்குப் பின்னரே கரை திரும்ப வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**காடு அழியின் நாடு அழியும்**

## வரி விளம்பரம்

### 200 நாடகங்கள்

யாழ்ப்பாணம் பேச்சு வழக்கில் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரேயொரு மாணவனான 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். கெட்டிக்காரர்கள் 25/- முதலாம்பிள்ளை 30/- (3029)

### உலகப்படம்

*Latest map of world, Latest Map of Sri Lanka* இரண்டும் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4901)

### புத்தக கண்காட்சியும் விற்பனையும்

செங்கை ஆழியானின் "6" நாவல்களின் தொகுப்பு '550' பக்கங்கள் ரூபா 150 - விற்பனையாகின்றது ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். மக்மில்லன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4902)

### வாங்கலாம், விற்கலாம்

உங்கள் கடிகாரங்கள் பழையனவாகிவிட்டனவா? கவலையை விடுங்கள். உங்கள் கடிகாரங்களை நியாயவிலைக்குத் தந்து புதிய கடிகாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். சகல றேடியோக்களும், மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளலாம். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (பழைய விகாரை முன்பாக) (3032)

### விற்பனைக்கு

பாவித்த வீடியோ, லைட்டுகள் விற்பனைக்குண்டு. சகலவித றேடியோக்கள், மணிக்கூடுகள் வாங்கியும் கொள்ளலாம். திருத்தியும் கொள்ளலாம். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச் வேக்ஸ், (*Dilka Watch Works*) 284. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (பழைய விகாரை முன்பாக) (3033)

### புலமைப்பரிசில மாதிரிப்பரீட்சை (ஆண்டு 5)

யாழ் மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரி


# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 67 பிரதேச செயலகங்கள் அமையும்

(கொழும்பு)

இலங்கை முழுவதிலும் மொத்தம் 268 பிரதேச செயலகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன என்றும் இவற்றில் 67 செயலகங்கள் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட இருக்கும் பிரதேச செயலகங்களின் விபரம் மாவட்ட ரீதியில் வருமாறு:-

**யாழ். மாவட்டம்**

வடமராட்சி கிழக்கு (பருத்தித்துறை), சாவகச்சேரி, வடமராட்சி வடக்கு, நல்லூர், வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வடமராட்சி (தென்மேற்கு), வலிகாமம் வடக்கு வலிகாமம் தென்மேற்கு, நெடுந்தீவு தீவுப்பகுதி தெற்கு (வேலணை), வலிகாமம், மேற்கு, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்.

**வவு.மாவட்டம்**

வவுனியா தெற்கு, வவுனியா வவுனியா வடக்கு, வெங்கல செட்டிக்குளம்.

**மன்னார் மாவட்டம்**

மன்னார், மாந்தை, மேற்கு நானாட்டான், முசலி, மடு.

**திருமலை மாவட்டம்**

திருக்கோணமலைபட்டினம் பாதாவி சிறிபுர, கோமரன், சகடவல, கிண்ணியா சேருவில மூதூர், கந்தளாய், குச்சவெளி, மொரவேவா, தம்பலகாமம்.

**மட். மாவட்டம்**

காத்தான்குடி, மண்முனை, ஏறாவூர், பட்டினம், மண்முனை தெற்கும் எருவில் பற்று, ஏறாவூர்பற்று, கோறளைப்பற்று, மண்முனை மேற்கு, கோறளைப்பற்று வடக்கு, கோறளை மேற்கு, மண்முனை தென்மேற்கு, போரைதீவுப்பற்று, மண்முனை வடக்கு (மட்டக்களப்புபட்டினம்)

**முல்லை மாவட்டம்**

புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய், மருதம் பற்று.

**கிளி. மாவட்டம்**

கரச்சி, பூநகரி, பச்சிலைப் பள்ளி.

**அம்பாறை மாவட்டம்**

தெஹியவத்த கண்டி, பதியத்தலாவை, மஹாஓயா, உளானை, நாமலோயா, அம்பாறை பட்டினம், தமனை, லஹக்கல, பொத்துவில், ஆலையடி வேம்பு, கருங்கொடித்தீவு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, திருக்கோவில், சம்மாந்துறை.

## குடியிருப்புப் பிரச்சினையால் வேலை நிறுத்தம்

(நுவரெலியா)

குடியிருப்பு பிரச்சினை காரணமாக நுவரெலியா ஒலிபண்ட் தோட்டத் தொழிலாளர்கள் 750பேர் கடந்த 10-ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்று இ. தொ. கா. நுவரெலியா மாவட்ட காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மழை காரணமாக தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன என்றும், அக் குடியிருப்புகளைத் திருத்தும்வரை ஒருவரும் பாவிக்காமல் கிடக்கும் விடுதிகளைத் தந்து உதவுமாறு தொழிலாளர்கள் கேட்டபோதும் தோட்ட நிர்வாகம் மறுத்துவிட்டது என்றும், இதனை ஆட்சேபித்தே இவ்வேலைநிறுத்தம் நடைபெறுகிறது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இப்பிரச்சினை தொடர்பாக இன்று 17 ஆம் திகதி தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் பூண்டுலோயா மொரேர தோட்டத்தைச் சேர்ந்த அறுநூறு தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்று இ. தொ. கா. நுவரெலியா மாவட்ட அதிகாரி அருள்சாமி தெரிவித்துள்ளார்.

தோட்ட நிர்வாகம் மேற்படி தோட்டத்தில் கொய்யப்படும் கொழுந்தை வேறு தோட்டத்திற்கு அனுப்புகிறது என்றும், ஆனால் சிறு தேயிலைத் தோட்டங்களில் இருந்து பெறப்படும் கொழுந்தை அத்தோட்டத்திலுள்ள தொழிற்சாலையில் பதப்படுத்துகின்றது என்றும், சிறு தேயிலைத் தோட்டங்களில் இருந்து பெறப்படும் கொழுந்தை இங்கு பதப்படுத்த முடியுமாயின் ஏன் இத்தோட்டத்திலேயே கொய்யப்படும் கொழுந்தை பயன்படுத்த முடியாது எனத் தொழிலாளர் கேள்வி கேட்டு வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## 18 வயதில் உயில் எழுத சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

உயில் ஒன்றைத் தயாரிக்கக்

### விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, வித்தியாலய அதிபர் ச. சண்முகலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது கம்பன் (நீலம்) இல்லம், 429 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப்பெற்றது

வள்ளுவர் (சிவப்பு) இல்லம் 376 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பாரதி (பச்சை) இல்லம், 333 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றது.

இப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பண்டத்தரிப்புகல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.சிவராசரத்தினம் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (42)

## உதைபந்தாட்ட போட்டியில் பாடுமீன் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் 13 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான உதை பந்தாட்டப் போட்டித் தொடரில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் பாடுமீன் அணி வெற்றி பெற்றது நடுவராக ஏ தேவராசா கடமையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆட்டத்தில் நாவாந்துறை சென் நீக்கலஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய வைக்கிங்ஸ் அணியை 6:2 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

வைக்கிங்ஸ் அணி வீரர் எம் பிரான்சில் சிறப்பாக ஆடி ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றார் நடுவராக ரீ. கருணாகரன் கடமையாற்றினார். (42)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 22 – 08 – 1967



தாயக மண்ணில் 17 – 08 – 1989

### வீரவேங்கை அன்ரன்

(செ. மகேந்திரன்)

அந்நியனை விரட்டியடித்து
தீரமுடன் போராடி களத்தில் மடிந்து
இன்று ஆண்டு மூன்றாமடா அன்ரனே (பபாவே)
உன் நினைவலைகளை நெஞ்சில் சுமந்து
இன்றும் ஆண்டு மூன்றடா
மூன்றல்ல முப்பது ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் மட்டும் எம் நெஞ்சங்களில்


## சமய அறிவுப் போட்டி

(நமது நிருபர்)

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இம்முறையும் ஒரு சமய அறிவுப்போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நல்லூர் முருகன் சனசமூக நிலையம் செய்து முடித்துள்ளது

போட்டிக்கான கேள்விப்பத்திரங்கள், நல்லூர் முருகன் ஸ்ரோர்ஸ், நல்லூர் யாழ். ஐக்கிய சங்கம் நல்லூர் சிவலிங்கம் ஸ்ரோர்ஸ் ஆகிய இடங்களில் ரூபா ஐந்து கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறையும் முதலாம் பரிசாக ரூபா ஆயிரமும் இரண்டாம் பரிசாக ரூபாஐந்நூறும், மூன்றாம் பரிசாக இருநூற்றி ஐம்பதும் கொடுத்து, மேலும் ஆறுதல் பரிசாக ரூபா நூறும் பத்துப் பேருக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்துள்ளது.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### பொதுசன நூலக அபிவிருத்தி

யாழ். மாநகர நூலகத்தின் நூல் வளத்தைக்கணிசமான அளவு அதிகரிக்கும் பொருட்டு, போதியளவு நூல்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் சிபார்சு செய்யும் நூல்களுக்கு முன்னுரிமை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது

ஆகவே, மாநகர எல்லைக்குள்ளும், அப்பாலும் வதியும் அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொதுத்தாபனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்தும், நூலக வாசகர்களிடமிருந்தும், அவர்கள் விரும்பும் நூல்கள் தொடர்பான பூரண விபரங்களை (புத்தகத்தின் பெயர், எழுதியவர் பெயர், பிரசுரிப்பாளர்) உள்ளடக்கிய பட்டியல்களை 20-08-92 வியாழக்கிழமைக்கு முன்பதாக எனக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 14-08-1992.

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-4895)



## நினைவு கூருகின்றோம்... 1992 - 08 - 17

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை, துவரங்காட்டுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும், சிறிலங்கா ஊர்காவல்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு மன்னார் தள்ளாடிச் சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிற்றூர்தியிலிருந்து இறக்கப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் காணாமல் போன நாட்டுப்பற்றாள

று த் த ரு ம நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை 18-08-92 செவ்வாய் மு ப. 7-00, பி ப 1 00 மணி நேரங்களில் நடைபெறும். வெளிமாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.- த. அம்பிகைபாகன். (3031)

## பயிற்சிநெறி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் நடத்தப்பட இருக்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி விரைவில் நடைபெறவுள்ளது.

(24)

(கொழும்பு)

சட்டரீதியாகப் பதினெட்டு வயதிலேயே உயில் ஒன்றை எழுதுவதற்கான தகுதிகளையும் வழங்கு வதற்கான சட்டத் திருத்தமொன்றை மேற்கொள்வதற்கு நீதியமைச்சு சமர்ப்பித்திருந்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1989 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தின்படி சட்ட ரீதியாக வயது 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது. எனினும் உயில்கள் தொடர்பான சட்டம் 21 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் செய்யும் உயில்கள் எதுவும் செல்லுபடியாகாது என்ற நிபந்தனை விதித்துள்ளது.

சட்ட மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் உயில் ஒன்றைத் தயாரிக்கக் கூடிய வயதை 21 இல் இருந்து 18 ஆகக் குறைப்பதற்கான யோசனை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். இந்த யோசனையை நீதி ஆலோசனைக் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

## இன்று

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் மங்கள இசை நடைபெறவுள்ளது. வி கே. கானமூர்த்தி வி. கே. பஞ்சமூர்த்தி, பி ரஜீந்திரன் ஆகியோர் நாதஸ்வரமும் கே. நித்தியானந்தன், பி முருகதாஸ், பி. கணேசன், ஆர். பாஸ்கரன் ஆகியோர் தவிலும் வாசிக்கின்றனர்.


வாசகப் பிரியர்களே!
இலக்கிய ஆர்வலரே!
நூலகப் பேராளரே!
பள்ளிச் சிறுவரே!
உயர்கல்வி மாணவரே!

## உங்கள் தேவைதான் என்ன?

போராட்ட நூல்களா?
நாவல் இலக்கியமா?
நவீன கவிதைகளா?
பாடநூல்களா?
இலக்கிய ஆராய்ச்சியா?

சகலவிதமான பாடசாலை நூல்கள்
பாடசாலை உபகரணங்கள் - அனைத்தும்
நிறைந்த மனதோடு குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
வாருங்கள்!

## "தமிழ்த்தாய் புத்தகசாலை"

இல 191, மின்சாரநிலைய வீதி,
பஸ்நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

[சி-4898]


மூன்றல்ல முப்பது ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் மட்டும் எம் நெஞ்சங்களில்
அப்படியே ...

பந்த பாசங்களை மறந்து - இளவயதின்
சுகபோகங்களை துறந்து
களத்தினிலே போராடும் வேங்கைகளின்
இலட்சியம் ஈடேற பிரார்த்திக்கின்றோம்

அம்மா, திரு திருமதி ஆனந்தராஜா,
சபாபதி தாத்தா ஆச்சி, மாமிமார்,
மற்றும் நண்பர்கள், உறவினர்.
(சி/4900)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:

தாயக மண்ணில்:
03-07-1992

## வீரவேங்கை செந்தில்

(சின்னத்துரை சிறீபத்மராசா)

வெற்றிலைக்கேணி, மண்டலாய்ப் பகுதியில் இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்)

என்றன் நாட்டின் ஒரு சாண்
நிலம்தான் எஞ்சியிருக்கும் வரை;
கன்று எலுமிச்சை கிணறு கள்ளி
எஞ்சி இருக்கும் வரை;
குன்றெறி மலையாய் விடுதலைப் போரை
கொள்ளச் சூளுரைப்பேன்
என்றே நடந்த உன்வழி
தொடர்கிறோம் எண்ணமது ஈடேற

ஊரெழு கிழக்கு
சுன்னாகம்.
(சி/4903)

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.

பட்டு, பின்னர் காணாமல் போன நாட்டுப்பற்றாளரான-

**குஞ்சு** (கனகரத்தினம் சதானந்தன்-புத்துவெட்டுவான், கிளிநொச்சி)

மற்றும், இதே சம்பவத்தில் இவருடன் காணாமல் போன 4 தமிழ் இளைஞர்கள்.

1989 ஆம் ஆண்டு பளை- வேம்பொடு கேணிப்பகுதியில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**அன்ரன்** (செந்தில்நாயகம் மகேந்திரராசா- கோப்பாய் வடக்கு)

இதே சுற்றிவளைப்பின் போது சயனைட், உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கப்டன் சிவா** (கணபதிப்பிள்ளை செல்லத்துரை எழுதுமட்டுவாள், பளை)

மணலாறு நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ்க் குழந்தைகள்.

மாத்தளையில், ஜே. வி. பி. இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உக்குவலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்- கரவெட்டி, வதிரிச் சந்தியில், இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு அம்பாறை வீரமுனைக் கிராமத்தில், சிறிலங்கா ஊர்காவல்படையினர் மற்றும், 'ஜிகாத் குழு' வினரால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 97 தமிழர்கள்.

சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4ஆம் குடியிருப்பு மத்திய முகாமைச் சேர்ந்த 2 தமிழ் விவசாயிகள்.

இயக்கச்சியில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

எழுதுமட்டுவாளில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட யாழ். குடும்பக் கன்னியர் மட வித்தியாலய மாணவி - அவரது சகோதரியான மற்றுமொரு இளம்பெண்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மூர்த்தி** (வினாயகமூர்த்தி இராஜேஸ்வரன் 3ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)

அம்பாறையில், தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொல்லப்பட்ட 13-ம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4899]

சிந்தனைக்கு

கட்சிக் கொடிகளின் நிழலில்தான் நாட்டுப்பற்று புதைக்கப்படுகிறது.

— ரேக் ஹென்றி ஸெயின்ட் - பியேர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## மரணச்சடங்கில் அரசியல்

இராணுவ அதிகாரியான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணமும், அவரது மரணச் சடங்கும் சிறிலங்கா அரசியலில் முக்கிய விவகாரமாக மாறியுள்ளது. வழமைபோலவே எதையும் தமது அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் அரசியல் கட்சிகள் இதனையும் தமது அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டதைத் தொடர்ந்தே இந்நிலை உருவாகியுள்ளது.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ சிறிலங்கா சுதந்திரக் கட்சி குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர். ஒருவகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உறவினரும் கூட. இதனால் டென்சில் கொப்பேகடுவ இராணுவத்தில் இருந்த காலத்திலும் அவர் குறித்து பிரேமதாசா அரசாங்கம் விழிப்பாக இருந்து வந்தது. எடுத்துக்காட்டாக கடந்த வருடம் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீதுபாராளுமன்றத்தில் குற்றவிசாரணை கோரும் மனு கொண்டுவரப்பட்டபோது அரசியலில் டென்சில் கொப்பேகடுவவின் நிலைப்பாடு குறித்து மறைமுகமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டும் இருந்தது.

இந்நிலையில்டென்சில்கொப்பேகடுவவின்மரணம் முக்கிய அரசியல் விவகாரமானது. இதனை எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், அரசாங்கமும் தமக்கு ஏற்ற வகையில் பயன்படுத்த முற்பட்டன. டென்சில் கொப்பேகடுவ மரணமடைந்ததும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அவர் தமக்கே உரியவர் என்றரீதியில் காரியத்தில் இறங்கியது. வீடுகளிலும் வர்த்தக ஸ்தாபனங்களிலும் வெள்ளைக்கொடிகளைப் பறக்கவிடுமாறு கோரிய சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொப்பேகடுவவிற்கு அஞ்சலி செலுத்தச்செல்பவர்கள் வெள்ளைக் கொடிகளை தாங்கியவண்ணம்செல்லுமாறுகேட்டுக்கொண்டார். அத்தோடு இத்தளபதிகளின் மறைவு குறித்து தேசிய துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அரசிடம் கோரிக்கையும் விடுத்தார்.

இதேவேளை கொப்பேகடுவவின் இறப்பை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்படுவதை உணர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையை விரைவில் முடிப்பதன் மூலம், தமது அரசிற்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சி உருவாக்கிவரும் எதிர்ப்பை தணித்துவிட எண்ணியது.

இதன்பிரகாரம் டென்சில்கொப்பேகடுவவின் இறு

# இலங்கை தொடர்பான புதிய கொள்கை இந்தியா விரைவில் வகுக்க வேண்டும்

## எதிர்காலத்திற்கு தயார்படுத்துவது அவசியம்

இந்தியா அதன் சடந்த கால அனுபவங்களையும், எதிர்காலத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு கூடுதலான அளவுக்கு அநுகூலமானதும், கேந்திர முக்கியத்துவம் கொண்டதுமான கொள்கை ஒன்றை இலங்கை தொடர்பாக வகுக்க வேண்டுமென்று வி. ஐயந்த் என்பவர் சென்னையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகைக்கு எழுதியுள்ள கட்டுரை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கட்டுரையில் அவர் மேலும் விபரிக்கையில், இலங்கையின் விவகாரங்களைப் பொறுத்த வரையில் ''தலையீடு செய்யாமை'', ''குறுக்கிடாமை'' என்பனவே தற்போதைய இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையைப் பிரதிபலிக்கும் முக்கிய சொற்பதங்கள் ஆகும்.

ராஜீவ் காந்தி யுகத்திற்குப் பின்னர் குறிப்பாக இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து முற்றாக வாபஸ் பெறப்பட்டதன் பின்னர், இலங்கை தொடர்பாக புதிய கொள்கை எதையும் இந்தியா எடுக்கவில்லை. இவ்விடத்தில் இந்தியா அதன் புதிய கொள்கையை வகுக்கும் என்று ஒரு வருடத்துக்கும் மேலாக காத்துக்கொண்டிப்பவர்கள் இதுவரை எதையுமே காணக்கூடியதாக இல்லை.

இலங்கை இனப்பிரச்சினையில் பெருமளவு தாக்கத்திற்கு முகம்கொடுக்கும் தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் நரசிம்மராவ் அரசாங்கம் இப்பிரச்சினை குறித்து பரிசிலனை செய்வதில் அக்கறை காட்டாமல் இருப்பதாக குற்றம் சாட்டுகின்றன. இந்திய இராணுவம் மீளப் பெறப்பட்டதுடன் இலங்கையில் பல தசாப்தங்களாகநீடிக்கும்இனப்பிரச்சினை தொடர்பாகவும், இந்தியா ஒரு புதிய நோக்கை கடைப்பிடிக்கவில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையின் முக்கியமான அம்சங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது. எனினும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை அந்நாட்டு அரசாங்கத்தின் ஒரு ''உள் விவகாரமாகவே'' இந்திய அரசாங்கமும், அதன் வெளியுறவு அமைச்சும் உண்மையில் கருதுகின்றன. இது விடயத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்படுவதற்கு இந்தியா விரும்பவில்லை

இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய தீர்க்கமான விவகாரங்கள் எதிலும் சம்பந்தப்படாமல் இந்தியா ஒதுங்கிக்கொள்ளும், அதே வேளை, அகதிகள் பிரச்சினையில் மாத்திரமே கவனத்தைச் செலுத்துகின்றது. தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகளை சாத்தியமான அளவு விரைவில் திருப்பிஅனுப்பிவிட வேண்டுமென்பதே தற்போது இந்தியா கடைப்பிடிக்கும் அணுகுமுறையின் முக்கிய அம்சமாக இருக்கின்றது.

நாடு திரும்பும் அகதிகளுக்கென காத்திரமான எந்தவொரு புனர்வாழ்வு நடவடிக்கையும், மேற்கொள்ளப்படவில்லை. குறித்தொதுக்கப்பட்ட மீள் குடியேற்றப் பகுதிகளில் குடியேறுவதற்கு, அல்லது 'சொந்த'' இடங்களுக்குத் திரும்புவதற்கு ஏதுவாக அகதிகளுக்கு ஒரு சிறுதொகை நிவாரணப் பணம் மாத்திரமே வழங்கப்படுகிறது.

சொந்த நாட்டில் தங்களது எதிர்காலம் குறித்து அகதிகள் மத்தியில் காணப்படும் மனச்சஞ்சலத்தை அகற்றி நல்லதோர் புனர்வாழ்வுத்திட்டம் காத்திருக்கிறதெனஅவர்களை நம்ப வைப்பதற்காகவே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தை சம்பந்தப்படுத்த இந்திய அரசு தீர்மானித்தது.

மேலும் புலிகளைக் கையாளும் விவகாரத்தில் ''இராணுவ தீர்வொன்றை'' நாடுவதா அல்லது அரசியல் இணக்கப்பாடொன்றை காண்பதற்காக பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடுவதா என்பதை தீர்மானிக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என்றே இந்திய அரசாங்கம் கருதுகிறது.

ஆனாலும், இனப்பிரச்சினை இழுபறி தொடர்பாக இந்திய அரசாங்கம் காட்டும் அலட்சிய மனோபாவம் கொழும்பிலுள்ளதமிழ்க்குழுக்களுக்கு கவலை அளிப்பதாக உள்ளது. இந்தியாவின் 'நல்லெண்ண உதவியின்றி' நடைமுறைச் சாத்தியமான இணக்கப்பாடு ஒன்றை இனப்பிரச்சினைக்கு காணக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று இக்குழுக்கள் எதிர் பார்ப்பதர்க இல்லை.

எனினும் இலங்கையின் ஐக்கியத்தைப் பேணுவது, இலங்கைத்தமிழர்களுக்கும் ஏனைய பிரஜைகளைப்போல சட்டபூர்வஉரிமைகளையும் அந்தஸ்துகளையும் அனுபவிக்க வேண்டும்என்பதுவே இந்தியஅரசின் கொள்கையாக இருக்கின்றது

பாராளுமன்றத்தெரிவுக்குழு இரு முக்கிய விவகாரங்களுக்கு தீர்வு காண வேண்டியதாக உள்ளது ஒன்றுவடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு, மற்றது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல். இந்த இரு விவகாரங்களிலும்தீர்வு காணாவிட்டால் இறுதி இணக்கப்பாடு எதுவும் சாத்தியமானதல்ல. இதிலும் இணைப்பு தொடர்பாக அரசியல் கட்சிகள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களால் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் விரைவான முன்னேற்றத்தை காணும் என்று இந்தியா நம்புவதற்கு இல்லை.

புலிகளைப் பற்றி இந்தியா என்ன கருத்தைக்கொண்டிருந்தாலும், இலங்கையின்வடக்கு, கிழக்கு பகுதிகளைப்பொறுத்தவரை புலிகள் கணக்கில் எடுக்கப்பட வேண்டிய பிரதான சக்திஎன்பதில்சந்தேகமில்லை. இப்போது புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு இஷ்டம் இல்லாதவர்களாக இல்லை. ஆனால்தீர்வுகாணும் முயற்சிகளில் புலிகள் எப்போது? எவ்வாறு? சம்பந்தப்படுவார்கள் என்பதைக் கூறுவது கடினமானது.

புலிகள் பங்குபற்றாதபேச்சுவார்த்தைகளால்நடைமுறைச் சாத்தியமான தீர்வு எதுவும் ஏற்படமுடியாது என்ற அபிப்பிராயம் கொழும்பில் வலுவாக இருக்கின்றது. உள்நாட்டுப்போரோ, அல்லது குடாநாட்டுச் சண்டையோ முடிவுக்கு வரவேண்டுமானால் ஏதாவது ஒரு கட்டத்தில் புலிகள் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஒரு அங்கமாகவேண்டும்.

இந்நிலையில் சம்பவங்களைக் கண்டு பேதலிக்காமல் இந்தியா எதிர்காலத்தை முன்நோக்கிப் பார்த்து அதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். யாழ். குடா நாட்டில் இடம்பெறக்கூடிய எந்தநிகழ்வும் பூகோள-அரசியல் எதிர் விளைவுகளையும், தாக்கங்களையும் ஏற்படுத்தும் என்பதை கருத்தில் எடுத்து இந்திய அரசாங்கம் - பார்வையாளராக எட்ட நிற்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்காமல் இலங்கை தொடர்பாக கூடுதலான அளவுக்கு நேர்மறையான நிலைப்பாடு ஒன்றை எடுக்கவேண்டும்.

நன்றி: வி. ஜயந்த்
'இந்து'

# பொஸ்னியா படுகொலை முகாம்கள்: நாய்க்கு உணவாக மனிதமூளைகள்

## சேபியர்களின் வெறியாட்டம்

(வாஷிங்டன்)

''பொஸ்னியா கொலை முகாமில் மது வெறியுடன் கூடிய சேர்பிய காவலர்கள் கைதிகளின் தொண்டைகளை கத்தியால் பிளந்து அவர்களின் மூளைகளை தங்கள் நாய்களுக்கு இரையாகப் போடுகிறார்கள். டாக்டர்கள் அவர்களது உறுப்புகளை குளிர்சாதன வாகனங்களில் எடுத்துச் செல்கிறார்கள்''.

### மருந்து, உணவுப் பொருள்களுடன்

இவ்வாறு இந்த முகாமிலிருந்து உயிர் தப்பிய அலிஜா லுஜினோவிக் என்ற 53 வயது நபர் ஒருவர் அமெரிக்க செனட்டர்களிடம் தெரிவித்தார்.

தொண்டையை வெட்டிப் பிளப்பதற்காக இளைஞர்கள் நிர்ப்பந்தமாகப் படுக்க வைக்கப் படுகின்றனர். தப்பி ஓட முயன்றவர்கள் சுடப்பட்டார்

அமெரிக்காவில்

# ஜனாதிபதி தேர்தல் களம் சூடு பிடித்து வருகிறது

(வாஷிங்டன்)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியினரும், குடியரசுக் கட்சியினரும் தங்களது வேட்பாளர்களின் வெற்றிக்கான தீவிர முயற்சிகளைமேற்கொண்டுவரும் அதே வேளை குற்றச்சாட்டுகளும் எதிர்க்குற்றச்சாட்டுகளும் அதிகரித்து வருகின்றன.

குடியரசு கட்சியினர் தமது

காலத்தைப் பற்றிய நோக்கு எதுவுமில்லாததினால் தான் தனது மனைவியைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என கிளின்டன் தெரிவித்தார்.

அமெரிக்கன் ஸ்பெக்டேட்டர் எனும் சஞ்சிகை திருமதி கிளின்டனை அமெரிக்க அரசியலில் ஒரு வின்னி மண்டேலாவாக இருப்பார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அதே சமயம் கருச்சிதைவு

கட்சி உருவாக்கிவரும் எதிர்ப்பை தணித்துவிட எண்ணியது.

இதன்பிரகாரம் டென்சில்கொப்பேகடுவவின் இறுதிக்கிரியையை அரசாங்கம் அவசரஅவசரமாக இரு தினங்களில் நடத்தியது. எதிர்க்கட்சியினர் விடுத்த தேசிய துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையையோ இறுதிக் கிரியைகளைப் பின்போடுவதுபற்றியோ, அன்றி இறுதிக்கிரியைகளைச் சுதந்திரசதுக்கத்தில் நடத்துவது பற்றியோ, அரசாங்கம் காதில்போட்டுக் கொள்ளவில்லை. இதே வேளை டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக்கிரியையில் இடம்பெற்ற கலகத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டது. கலகக்காரர்கள் வீசியகற்கள் கொப்பேகடுவவின்குடும்பத்தினரைத் தாக்கியதாக அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்தார். ஆனால் இதனை அரசியல் அனுபவம் பெற்ற கொப்பேகடுவ குடும்பத்தினர் உடன் மறுத்துவிட்டனர்.

அதாவது 'தேசியவீரன்', 'துட்டகைமுனு'என சிங்கள மக்களினாலும், அரசாங்கத்தினாலும் பாராட்டப்பட்ட தளபதியான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையை தேசிய அந்தஸ்து வழங்காமல் பிரேமதாசா அரசாங்கம் நிறைவேற்றி முடித்தது. சாதாரணமாக உயிர் நீக்கும் ஓர் இராணுவ அதிகாரிக்கு வழங்கப்படும் பூரண இராணுவ மரியாதையுடன் மட்டுமே 'தேசிய வீரனின்' சடலம் அடக்கம் செய்யப்பட்டது. "இராணுவத்தினரின் மறைவிற்குத் தேசிய துக்கதினம் கொண்டாடுவது வழக்கம் இல்லை" என்று அரசாங்கம் விளக்கம் கூறியது.

ஆனால் உண்மையில் கொப்பேகடுவவிற்கு வழங்கப்படும் அரச கௌரவம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இலாபகரமாக அமைந்து விடும், இதனால் தமது ஆட்சி அதிகாரம் ஆட்டம் கண்டுவிடும் என்ற ஒரே நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் டென்சில் கொப்பேகடுவவுக்கு அரச கௌரவம் வழங்கவில்லை. அதாவது கட்சிகளின் அதிகாரப் போட்டியினால் ஒரு 'துட்டகைமுனுவின்' அந்தஸ்து குறைக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எவ்வாறு காணமுடியும்? தமது அதிகாரப் போட்டியின் காரணமாகத் தமது "துட்டகைமுனுவின்" புகழையே குறைக்க முற்பட்டுள்ள சிங்கள அரசியற் கட்சியினர் இனப் பிரச்சினைக்கு துணிந்து எவ்வாறு ஒரு தீர்வை முன்வைப்பார்கள்?

மருந்து, உணவுப் பொருள்களுடன்

## ஐ. நா. வாகன அணி பொஸ்னியா சென்றது

நாற்பத்தியாறு தொன் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் ஏற்றிச்சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் வாகன அணி, முற்றுகையில் இருக்கும் பொஸ்னியா நகர் ஒன்றைச் சென்றடைந்துள்ளது

ஐக்கிய நாடுகள் அமைதிப் படை பாதுகாப்பு வழங்கியதால் எட்டு றக்குகளும் சென்றடைந்ததாக அகதிகளுக்கான ஐ நா. தூதுவரகம் விடுத்த அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

பெருமளவு முஸ்லிம்கள் வாழும் இக்குறிப்பிட்டநகரை சென்ற ஏப்ரல் மாதம் முதல் செர்பியப்படைகள் முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

படைபலப் பிரயோகத்திற்கு ஐ நா. அனுமதி வழங்கிய பின்னர் சென்ற முதலாவது உணவு உதவித்தொகுதி இதுவாகும்.

இதனிடையே முற்றுகைக்கு உள்ளான நகரப்பகுதிக்கு மருந்து மற்றும் உணவுப்பொருள்களை வழங்கிவிட்டு பொஸ்னியத் தலைநகர் சரயேவோவிற்கு திரும்பிய ஐ நா. வாகனங்கள் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

காபூலில் தொடர்ந்தும்

## கடும் ராக்கெட் தாக்குதல் ராஜீய பணியாளர் வாபஸ்

(காபூல்)

காபூலில் தொடர்ந்து ராக்கெட் தாக்குதல் நடைபெறுவதால் ராஜீயப் பிரதிநிதிகளை பாதுகாப்பாக வெளியேற்றுவது பற்றி தூதுவரக அதிகாரிகள் குழு அதிபர் ரபானியை சந்தித்து .பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. பலநாடுகளின் தூதுவரகங்களையும் சேர்ந்த சுமார் இருநூறு பணியாளர்கள் தற்போது காபூலில் இருக்கின்றனர். இவர்களில் நூறு பேர் ரஷ்யத் தூதுவரகத்தை சேர்ந்தவர்களாவர்.

போட்டிக் குழுக்களுக்கு இடையே மோதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதால் காபூல் விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது.

## சர்வதேச மன்னிப்பு சபைக்கு இந்தியா அனுமதி வழங்கும்?

(டில்லி)

சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினரை இந்தியாவிற்குள் அனுமதிப்பது பற்றி இந்திய அரசு சிந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அனைத்துலக மனித நேய ஸ்தாபனங்கள் தாங்களாகவே விசாரித்து அறியாது மற்றவர்களிடமிருந்து விசாரித்து அறிக்கை விடுவதைவிட இந்த இயக்கங்களை நாட்டிற்குள் அனுமதிப்பது நல்லதென்று அரசு வட்டாரங்களில் கருதப்படுகிறது.

சர்வதேசமன்னிப்புச் சபையை இந்தியாவிற்குள் அனுமதிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவித்துள்ளார்.

கப் படுகின்றனர். தப்பி ஓட முயன்றவர்கள் சுடப்பட்டார்கள். இளைஞர்களின் பின்புறத்தில் ஏறி நின்று அவர்களின் தலைமயிரைப் பற்றி தலையைப் பின்புறம் இழுத்து தொண்டையை அறுத்தார்கள் எனவும் அவர் செனட் இராணுவசேவைக் கமிட்டியிடம் தெரிவித்தார்.

கடந்த ஆறு வாரங்களாக தினமும் பத்துமுதல் இருபது பேர் இவ்வாறு கொல்லப்பட்டதைக் தாம் கண்டதாகவும் லுயினோவிக் கூறினார்.

தான் முகாமுக்குள்கொண்டு செல்லப்பட்டபோது 1500 பேர் அங்கிருந்தனர் என்றும், யூன் மாதம் அங்கிருந்து தான் தப்பியபோது 150 பேர் மட்டும் உயிருடன் இருந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

வடிகாலுக்கருகிலுள்ள நடை பாதையில் இளைஞர்களின் தொண்டை பிளக்கப்பட்டு அவர்களின் இரத்தம் வடிகாலில் ஓடும்படி செய்யப்படுகிறது. பலர் முகாமில் இருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டு தொண்டை வெட்டப்பட்டபின் அவர்களின் உடல்களும் பிளக்கப்பட்டன. நாய்கள் அவற்றை தின்ன விரும்பாததால் மண்டைகள் உடைக்கப்பட்டு மூளைகள் அவற்றுக்குக் கொடுக்கப்பட்டன. நாய்கள் மூளைகளை விரும்பித் தின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

வருகின்றன.

குடியரசு கட்சியினர் தமது தேர்தல் இயக்கத்தில் ஜனநாயக கட்சி வேட்பாளர் கிளின்டனின் மனைவி ஹில்லரியை உபயோகித்து வெற்றி பெற முயல்கின்றனர். புஷ்சை வேட்பாளராக நியமிக்கஉள்ள இக்கட்சியின் தலைவர்கள் கிளின்டன் ஜனாதிபதியினால் அவரதுமனைவி சிலகொள்கை விஷயங்களில் தனது கணவன் மீது செல்வாக்கை உபயோகிப்பார் என குறை கூறியுள்ளனர்.

இது குறித்து தனது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எதிர்

அதே சமயம் கருச்சிதைவு தடையை ஆதரிக்கும் ஜனாதிபதி புஷ்ஷும் உப ஜனாதிபதி குவைலும் தங்கள் சொந்தக் குடும்பத்தில் வேறு கொள்கையை கடைப் பிடிபபதாகபெண்களுக்கான தேசிய ஸ்தாபன தலைவி பெட்ரீஷியா அயர்லண்ட் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை வாஷிங்டன் போஸ்ட் நடத்தியஅபிப்பிராய வாக்கெடுப்பில் புஷ்ஷுக்கு 35சதவீத ஆதரவும் கிளின்டனுக்கு 61சதவீத ஆதரவும் இருப்பதாக தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தான் - அமெரிக்கா கூட்டு கடற்படை பயிற்சி

(டில்லி)

பாகிஸ்தானும்அமெரிக்காவும் நேற்று முன்தினம் கூட்டுகடற்படைப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். பிரெஸ்லர் திருத்தத்தின் கீழ் பாகிஸ்தானுக்கான பாதுகாப்பு சாதனங்கள் விற்பனை தடைசெய்யப்பட்ட பின்பு இப் பயிற்சிகள் நடைபெறுவது இதுவே முதன் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரப்பனைக் கைது செய்ய இராணுவம் அழைக்கப்படும்

- கர்நாடக அரசு அறிவிப்பு

(பெங்களூர்)

சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டிருக்கும் வீரப்பனையும், அவனது குழுவினரையும் பிடிக்க இராணுவத்தை அழைப்பது என்று கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது. வீரப்பன் கூட்டத்தால் கொலைசெய்யப்பட்ட பொலிஸ் சுப்ரிண்டன் ஹரி கிருஷ்ணாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதல்வர் பங்காரப்பா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சந்தனமரக் கடத்தல் காரர்களால் பொலிஸ்காரர்கள் படுகொலை செய்யப்படுவதை தொடர்ந்தும் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும், இதுவரையில் மாநிலப் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பதினைந்து பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவர்களைக் கைது செய்ய இராணுவத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும்என்றும்தெரிவித்தார்

## ஈராக்கில் மீண்டும் போர்; நியூயோர்க் டைம்ஸ் ஊகம்

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும்ஈராக்குடன்கொண்டுள்ள பகைமை மீண்டும் போராக வெடிக்கலாம் என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

நியூயோர்க் டைம்ஸ் பெயர் குறிப்பிடாத அமெரிக்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெளியிட்டிருக்கும் முன்பக்கச் செய்தியில் மேலும் ஈராக்கின் அரசுக் கட்டடங்களில்அணுஆயுதங்கள் பற்றிய சர்ச்சையை அடுத்து இந்த நெருக்கடி எழுந்திருப்பதாக தெரியவருகிறது ஐ. நா. ஆயுதக் கண்காணிப்பு குழுவின் நடத்தைகள் ஈராக்கின் இறைமைக்கு பங்கம் ஏற்படுத்தியிருப்பதாக ஈராக் குற்றம் சாட்டிவருவது தெரிந்ததே.

ஈழநாதம்

# நதிகளை இணைக்கக்கோரி தமிழ்நாடுமுழுவதும்யாத்திரை

(சென்னை)

தென்நாட்டு நதிகளை இணைக்கக்கோரி மத்திய அரசை வற்புறுத்த தமிழ்நாடு முழுவதும் ஜீவ்யாத்திரை நடத்த அனைத்துக் கட்சியின ரும் முடிவு செய்துள்ளனர்.

இந்திரா காங்கிரஸ், ஜனதா தளம், ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பல்வேறு விவசாய சங்கங்கள் சேர்ந்து நடத்தும் இந்த யாத்திரை வரும் 22 முதல் 29 ஆம் திகதி வரை தமிழகம் முழுவதிலும் சுற்று யாத்திரை செய்து விட்டுப் பின்னர் ஆளுநரிடமும், முதலமைச்சரிடமும் மனுக் கொடுப்பார்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தியும், ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கா. பாண்டியனும் சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கடற்படை சூட்டதில் ஒரு பெண் பலியானார்

(சென்னை)

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெகதாப் பட்டணத்தில் உள்ள கடற்படைப் பிரிவு அலுவலகருக்கும் அந்த ஊரிலுள்ள ஐஸ் தொழிலாளருக்குமிடையே நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் பதினெட்டு வயதுப் பெண் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார்.

ஜெகதாப்பட்டணம் அருகில் உள்ள பாலக்குடி கிராமத்தில் உள்ள கடற்படையினர் தேவையற்ற முறையில் ஏ.கே-44 ஆல் சுட்டதால் இந்தப் பெண் கொல்லப்பட்டார் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

இத்தகைய செயலில் ஈடுபட்ட கடற்படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சருக்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எழுதியுள்ளார். கடற்படை ஊழியர்கள் சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொண்டார்கள் என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

## 13 வயது மகனை பெற்றோர் பட்டினிபோட்டு கொன்றனர்

தமது பதின்மூன்று வயதான மகனை பட்டினியால் சாகடித்த பெற்றோருக்கு 99 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாய் ராய்ட்டர் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. சமையலறையில் இப்பையன் சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டிருந்தான். தமது பூனையை போசித்த பெற்றோர் மகனை பட்டினியால் கொலை செய்தனர் எனவும் இந்த விடயம் பற்றி மேலும்தெரியவருறகிது

## இந்திய-பாகிஸ்தான் வெளியுறவுசெயலர் சந்திப்பு

(டில்லி)

இந்திய- பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்களிடையே இன்று புதுடில்லியில் பேச்சுவார்த்தைகள் தொடங்குகின்றன.

இந்த ஆறாவது கட்டப் பேச்சுவார்த்தையில் இருநாடுகளுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களைக் களைவது குறித்து அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

கடந்த மேமாதம் இந்தியத் தூதரக அதிகாரி ராஜேஷ்மித்தல் மீது பாகிஸ்தான் பொலிசார் தாக்கியதையடுத்து இந்தியா பேச்சுவார்த்தையை

உறவு ஏற்படத் தடையாக இருப்பது, பாகிஸ்தான் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவுவதே என்று பிரதம மந்திரி பி. வி நரசிம்மராவ் கூறியிருக்கின்றார்.

### விண்வெளியில் தவளை முட்டை

செப்டெம்பர் மாதத்தில் விண்வெளிக்கு ஏவப்படும் விண்கலத்தில் கருக்கட்டப்பட்ட தவளை முட்டைகளும் அனுப்பப்படவுள்ளன. ஈர்ப்புத் தன்மையற்ற நிலையில் உயிரினத்தின் பிறப்புகளை எவ்வாறு

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**பதவி வெற்றிடம்**

இப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992- 9 - 4 ஆம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி: சுகாதரத் தொழிலாளி (தாழ்தரம்)

சம்பளத் திட்டம்: ரூபா 1775 -8X30-2015/- மாதமொன்றிற்கு. (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்

---

## சந்திக்கவும்

1985ஆம் ஆண்டு தொடக்கம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாக இருந்தவர்களும், வேறு காரணங்களால் தொடராமல் இடையில் விலகியவர்களுக்கும் தத்தம் கோட்டாக்களுக்கு பொறுப்பாகவுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை இன்று திங்கள் கிழமை காலை 10 மணிக்கு சந்தித்து, அவர்கள் சேவைக்கால ஆலோசகர்கள் தொடர்பாக வழங்க இருக்கும் படிவங்களை பூரணப்படுத்தி மீள அவரிடமே கையளிக்குமாறு பிரதேசக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த சஞ்சிகையான ''சமூக ஒளி'' வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற உள்ளது.

எனவே அனைவரையும் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## பரீட்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1990 - 91 கல்வியாண்டு முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சை இன்று முதல் (17 - 8 - 92) ஆரம்பமாகிறது என பரீட்சைப் பகுதி அறிவித்துள்ளது. (05)

### ஓய்வு பெற்ற வைத்தியர் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இருக்கும் வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதை யடுத்து ஒய்வு பெற்ற டாக்டர்களும், ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது

அம்பாறை. மட்டக்களப்பு. திருக்கோணமலை மாவட்டங்களில் சேவையாற்றுவதற்கு செப்டம்பர் மாதம் முதல் இவர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்

### ஹெலி

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்

கனத்தைக் கலவரம்

## பத்து இளைஞர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பு கனத்தைப்பொது மயானத்தில் மேஜர் ஜெனரல் விஜயவிமலரத்னாவின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட போது இடம் பெற்ற சம்பவங்களில் அரசாங்கக் கட்சி உறுப்பினர்களைத் தாக்கியதாக கூறப்படும் பத்து இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் கல்லெறிக்கு இலக்காகிக் காயமுற்ற கொழும்பு மேயர் ரதனசிறி ராஜபக்ஷவின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும்.

மேலும் பலர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

உடற்கல்விப் போதனாசிரியர் தரம் 11 (ஆணும், பெண்ணும்) பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-09-15 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்

சம்பள அளவுத் திட்டம்: 3500-10X100- 4500 - மாதமொன்றுக்கு

தகைமைகள்: (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உடற்கல்விப் பட்டம் அல்லது உடற் கல்வியில் அதற்குச்சமனான அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டமொன்றைப் பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு படுத்தி செயற்படுத்துவதில் ஐந்தாண்டு அனுபவம்.

அல்லது

(ஆ) நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய தேசிய விளையாட்டு அணி ஒன்றின் உறுப்பினராகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின்பட்டதாரி. அல்லது பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்த பட்சம் ஆறாண்டு அனுபவமுடைய தேசிய வீர முதல்வன்.

அல்லது

(இ) தேசிய விளையாட்டு அணியில் உறுப்பினராகவிருந்த எட்டு ஆண்டுகளுக்கு குறையாத சேவையுடன் அத்தரத்தில் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக்

---

## மிதி வெடியில் காலை இழந்தார்

அம்பனைப் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற இளைஞர் மிதி வெடியில் சிக்கியதில் தனது இடது காலை இழந்தார்.

நேற்றுக்காலை 10. 30 மணியளவில் நடை பெற்ற இச் சம்பவத்தில் இளையவர் மூர்த்தி (வயது 18) என்ற அளவெட்டியைச் சேர்ந்த இளைஞரே தனது காலை இழந்தவராவர். (ச)

## புதையல் தேடிய 24பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

தென்னிலங்கை அகலவத்தை பகுதியில் முன்னாள் மன்னன் வீதியபண்டார புதைத்து வைத்துள்ளதாகக் கூறப்படும் புதையலைத் திருட்டுத்தனமாகத் தோண்டி எடுப்பதில் ஈடுபட்டிருந்த 24 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

பதுரெலியப் பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் இவர்கள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

பதுரெலிய நகரிலிருந்து சுமார் எட்டுமைல் தொலைவிலுள்ள மாகௌஎல்ல என்ற காட்டுப்பகுதி அமைந்துள்ளது. இந்த காட்டுப்பகுதியில் முன்னாள் மன்னன் வீதியபண்டாரவின் மனைவி நீச்சலாடுவதற்கென அமைக்கப்பட்ட குளப்பகுதியிலேயே புதையல் இருப்பதாகவும்,

இது தொடர்பான தகவலை வெளிச்சம் பார்த்து ஒரு பெண்ணே தெரிவித்தார் என்றும் இந்தப் பெண்ணும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அங்கத்தவர் ஈடுபாடு பற்றி சு. கட்சி விசாரணை நடத்தும்

(கொழும்பு)

கனத்தை மயானத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களில் சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களின் ஈடுபாடு குறித்து அக்கட்சி விசாரணைகளை நடத்தும் என்று தெரியவருகிறது.

காலஞ்சென்ற டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரட்ன ஆகியோரின் மரணச் சடங்குகள் நடைபெற்றபோது ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனையடுத்தே இவ்விதமான முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

---

## 45ஆம்நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 02 - 12 - 1969



தமிழீழ மண்ணில் 05 - 07 - 1992

**வீரவேங்கை இளம்பிறை**

தியூா பேச்சுவார்த்தையை ரத்துச்செய்யும் அளவிற்த மோதலாக மாறியது.

இதேவேளை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே

தின் பிறப்புகளை எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

---

## மரண அறிவித்தல்

செல்வி

## சுகிர்தம் நாராயணசாமி

மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் கடமையாற்றும் செல்வி சுகிர்தம் நாராயணசாமி நேற்று அதிகாலை காலமானார்.

ஈமக்கிரியைகள் நேற்றுப் பிற்.பகல் 2.00 மணியளவில் ஆனைப்பந்தியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:

மக்கள் வங்கி ஊழியர்
நலன்புரிச்சங்கம்.

(3035)

---


## மீண்டும் இன்று சந்திக்கின்றோம்!

உங்கள் பொறுமையைச் சோதிக்க
விரும்பவில்லை
ஆனால் ஒரு சிக்கல் இடமின்மை
காரணத்தால்
சில குறிப்பைத் தந்துவிட்டு நாளை
கண்டிப்பாக
உங்களுக்கு சொல்கின்றோம்
தமிழீழத்தில் முதற்தடவையாக....
காற்றூட்டப்பட்ட சற்று சீர்தூக்கிப்
பாருங்கள் மிகுதி நாளை

விளம்பர அமைப்பு
செனித் ஜோ. எக்

[3021]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


---

படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்.)

தகைமைகள்: 1. மலசலகூடங்கள், வடிகால்கள் முதலியனவற்றைச் சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: பொதுவுளச்சார்பற் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு: உளவு முத்திரை பெற்றுள்ள குடும்ப அங்கத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரையொட்டிய 23X10 செ.மீ அளவுடைய கடித உறைகளை அனுப்பித் தபால் மூலமாகவோ பெறவிரும்புவோர். இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1992 - 8 - 14 (சி-4905)

---

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் யூட்ஜெனிஸ்ரன் (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார். (ச)

---

### இராணுவத்தின்

டென்சில் கொப்பேகடுவ ஒரு போதும் அரசியலில் ஈடுபட்டது கிடையாது. தீவிர வாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே செயற்பட்டார் என்றார்.

---

### மாரியம்மன்

டம் முறையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பங்கு கொண்டோருக்கெதிராக நடவடிக்கை யெடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

---

### ஐரோப்பிய

தாமதமேதுமின்றி அரசியல் தீர்வொன்றை சம்பந்தப்பட்டவர்கள் காணவேண்டும் என்றும்,

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க தெரிவுக்குழு நியமிக்கப்பட்டதை வரவேற்கும் தீர்மானமொன்றை ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க விரும்புவதாகவும் இத் தூதுக்குழுவினர் அனுரா பண்டாரநாயக்காவிடம் கூறினர்.

ஐரோப்பிய எம். பி. ஹென்றி சாபி தலைமையிலான இக்குழுவில் கொமன்ஸ் சபையின் உறுப்பினரான ஜோர்ஜ் ஸ்டீவன்சன் மற்றும் உயர் அதிகாரியான ரிச்சர்ட் குப்வெல் ஆகியோர் அடங்குகின்றனர்.

---

### வலிவடக்கு

ணுவ நடவடிக்கை காரணமாக சென்ற சில மாதங்களில் பயிரிடப்பட்ட வெற்றிலைத் தோட்டங்கள் வெகுவாக அழிந்துள்ளன. இதற்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (09,11)

---

டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டுள்ள உடற்கல்விப் போதனாசிரியர்.

வயது; 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப்பரீட்சை மூலம்

மேற்குறித்த பதவிக்கான விண்ணபப்பப்படிவங்களையும், விபரங்களையும் இப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெறவிரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச.மீ. அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப் பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்

உடற்கல்விப் போதனாசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-13. (சி/4904)

---

## வீரவேங்கை இளம்பிறை

(சின்னத்தம்பி விக்னேஸ்வரமூர்த்தி)

(முகாவில், இயக்கச்சி)

கட்டைக்காடு நேரடி மோதலில்
வீரச்சாவை எய்திய இவருக்கும்
இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட
மற்றையோர்க்கும் எமது வீரவணக்கம்

மிருசுவில் வடக்கு, -குடும்பத்தினர்
மிருசுவில். [சி-4906]

---

## மரண அறிவித்தல்

## வைத்தியநாதர் கந்தையா

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் கிழக்கு ''சிவகுமாரன் வீதி'' யை வசிப்பிடமாகக் கொண்டவருமான வைத்தியநாதர் கந்தையா அவர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணிக்கு சிவபதமடைந்து விட்டார். அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், கந்தசாமி (கனடா), நாகராசா (ஜேர்மனி), குகநேசன் (கல்வயல்), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (கனடா), ஆனந்தலிங்கம் (பிரான்ஸ்), சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், திரவியராணி (கனடா), ரோகினி (ஜேர்மனி), ராஜலட்சுமி (கல்வயல்) மனோ (பிரான்ஸ்), மகேந்திரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைசீகன், டினேஸ், தாட்சாயணி, சந்துரு ஆகியோரின் பாட்டனாரும், பசுபதி (உரும்பராய் கிழக்கு சிவகுமாரன் வீதி) யின் தாய் மாமனாருமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று திங்கட் கிழமை பகல் 2.00 மணியளவில் உரும்பராய் இளங்காடு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சிவகுமாரன் வீதி, தகவல்:
உரும்பராய் கிழக்கு. சு. பசுபதி

[3036]